ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

17.07.2025

1. கருணைமிகுந்த ஞானக் குடிலை
கந்தனே கட்டளையிட்டு அருள
ஆறுமுக அரங்க மகான் யானும்
அமைத்தேன் பிரணவக் குடிலாக

2. ஆகவே அன்னதானம் துவக்கி
அருட்சோதி வழிபாடென்கின்ற
மகான்களின் மகா பூசை தொடர
மகா சக்திபட வேலவனும் இறங்கி

3. இறங்கி ஏழாம் படை வீடாக்கிட
இனிதே அரங்கனும் பெருமைபாடி
வரங்களாக அருட்சுவடி மூலம்
வழங்குவேன் குருவார அருளாசி

4. ஆசியதும் விசுவாவசு நள்ளி திங்கள்
அருளுவேன் முதல் குருவார ஆசியாக
வாசி வென்ற ஞானிகள் படைகள்
வலம் வந்து பிரணவக் குடிலை

5. குடிலை காத்து வருதலுற
கும்பிட்டு குருவே என போற்றி
நாடித் தேடி வரும் மக்களுக்கு
ஞானிகளோடு வேலவனார் ஆசி

6. ஆசியும் அரங்கமகான் என்
ஆற்றல்மிக்க சரவணசோதி வழி
வசமாகியும் வரமாகியும் கிட்டி
வளர்ச்சி மாற்றம் வந்தடையும்

7. அடையவே தானென்ற ஆணவமும்
அழிந்து பரிபக்குவமும் தானாக
தடையறக் கிட்டி தருவழிதனை
தரணியில் தொடர அருள்புரியும்

8. அருள் தரும் நல்ஆக்கமும் தரும்
அரங்கனென் குடில் அமுதாம்
அருள் அமுதை உண்டு வருவதுடன்
அன்னதான மகா சேவை தன்னில்

9. தன்னிலே பொருளுதவி செய்து
தன்வினை வெல்லும் முயற்சியாக
மண்ணுலகில் மக்கள் யாவரும்
மனமுவந்து செயலை காண

10. காணவே மாதரும சக்தியும்
கலிதனில் நிரம்பி மாற்றம்
ஞானயுக மாற்றம் ஆகவும்
ஞானபண்டிதன் வெளிப்பட்டு வரும்

11. வருகின்ற ஞான ஆட்சிக்காலமாக
வைபகம் தேற்றம் பெறும்
ஆறுமுகா அரங்கா என்கின்ற
அனுதின செபதபம் அற்புதம் தரும்
குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி